Service and Information Update

# நகர நிர்வாகமானது, ஜுன் 15 ஆம் தேதி முதல் அவசர நிலை மற்றும் கருணையின் அடிப்படையில் திருமண உரிமங்களை வழங்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜுன் 10, 2020) – ஜுன் 15, திங்கட்கிழமை துவங்கி, நகர நிர்வாகமானது, முன் பதிந்த சந்திப்பின் பேரில் அவசர நிலை அல்லது கருணையின் அடிப்படையில் திருமண உரிமங்களை வழங்கத் துவங்கும். மார்ச் 16 ஆம் தேதியிலிருந்து நகரத்தின் பல துறை அலுவலகங்களும் மூடப்பட்டிருப்பதால், கோவிட் -19 தொற்றுப்பரவல் காலத்தின்போது, குடியிருப்பு வாசிகள் மற்றும் அலுவலர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கருதி, நகர நிர்வாகம் திருமண உரிமங்கள் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்திவிட்டது.

திருமண உரிமத்திற்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு தனி நபர் என்னும் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு, அவசர நிலை அல்லது கருணை ஆகிய தேவைகளின் பேரில் முன்னுரிமை அளிக்க பரிசீலிக்கப்படும். 2020 ஜுலை மாத இறுதிக்குள்ளாக நடக்கவிருக்கின்ற திருமண நிகழ்ச்சிகளுக்கு நகர நிர்வாகம் முன்னுரிமை தரும்.

விண்ணப்பதாரர்கள் திருமண உரிமத்திற்கான தங்கள் வேண்டுகோள்களை marriage.licence@brampton.ca என னும் மின்னஞ்சல் மூலம் அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஜுன் 15 ஆம் தேதி துவங்கி ஆன்லைன் விண்ணப்ப செயல்முறை மூலமாக வேண்டுகோள்கள் பரிசீலிக்கப்படும்; ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், நகர நிர்வாகமானது திருமண உரிமம் தேவை என தீர்மானம் செய்துகொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்பதிந்த ஒரு சந்திப்புக்கு அவசர நிலை அல்லது கருணை அடிப்படையில் ஏற்பாடு செய்யும். திருமண உரிமத்திற்கான விண்ணப்பம் மற்றும் இந்த மாற்றங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு இந்த வலைத்தளத்திற்கு வருகை தரவும் www.brampton.ca .

ப்ராம்ப்ட்டன் நகரில், குடியிருப்புவாசிகள் மற்றும் பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பே முன்னுரிமை கொண்ட விஷயமாகும். நகரின் அலுவலகங்களுக்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமுகமாக, முன்பதிந்த சந்திப்புக்கள் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மட்டுமே ஏற்பாடு செய்யப்படும். கோவிட்-19 தொற்றுப்பரலின் இந்த சமயத்தில் இந்த அலுவலகங்கள் மூடப்பட்டே இருக்கும். பொதுமக்கள் விழாவாக அனுசரிப்பது இச்சமயத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca